sons of persons engaged in agriculture and are keen on joining the Agricultural College, irrespective of considerations of merit, native district, community, etc.; candidates who are not sons of persons engaged in agriculture are admitted only in case the required number of sons of persons engaged in agriculture are not readily available.

SRI N. MAHALINGAM: இந்த வருஷம் விவசாயக் கல்லூரியில் சேருவதற்கு நிறைய மாணவர்கள் விண்ணப்பித்துக் கொண்டிருந்ததால், மற்றும் ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிப்பது பற்றி அரசாங்கம் சிந்திக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மற்ருெரு விவசாயக் கல்லூரி அமைப்பது பற்றி மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED: May I know, Sir, the number of seats reserved for the students of other States.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I would like to have notice.

Grape cultivation

* 358 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லா, கோபிசெட்டிப்பாளையம் தாலூகா, தாளவாடி மலைப் பிரதேசத்தில் எத்தனை ஏகரா நிலத்தில் திராட்சைப் பழ உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது ?

(ஆ) இப் பிரதேசத்தில் திராட்சைப் பழ உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பரிசீலனை நடைபெற்று வரின், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Only about 30 cents of land and that too in the backyards of houses is under grape cultivation. Grape is not grown in acre scale anywhere in the Talavadi firka.

(*b*) There is no special proposal to increase the area under grapes in this firka.

SRI P. G. MANICKAM: தாளவாடிப் பிரதேசமானது மழைப் பிரதேசமாகும். அங்கு கிராக்ஷைப்பழ உற்பத்திக் குரிய வசதிகள் அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகையினல் மீண்டும் பரிசீலனை செய்து அங்கு அதிகமான ஏகராவில் திராக்ஷைப் பழம் உற்பத்தி செய்வதுபற்றி சர்க்கார் கவனம் செலுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஓரளவு அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது, கோபிசெட்டிப் பாளையம் தாலுகாவில். ஆனல் எங்கு அதிகமாக விளையக்கூடிய மண் வளம் இருக்கிறதோ, அங்கே விசேஷ கவனம் செலுத்தப் படும்.